# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________

   (Name) ____________________________

2. (Signature) ____________________________

   (Name) ____________________________

OMR Sheet No. : ..............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.________________________________
(In words)

**D 2 6 1 4**

Time : **1 $^1/_4$** hours] [Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** (A) (B) ● (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**

**TAMIL**
தமிழ்

**Paper-II**
தாள்-**II**

**Note** : This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying Two (2) marks. Attempt all the questions (50 × 2 = 100).

குறிப்பு : இந்த வினாத்தாள் ஐம்பது *(50)* விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் (2)இரண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (50 × 2 = 100).

**1.** 'ஞ்' என் புள்ளி ஈற்றுச் சொல் வேற்றுமை உருபு ஏற்கையில் பெறுகின்ற சாரியை
(A) அன் (B) இன் (C) வற்று (D) அத்து

**2.** பதிற்றுப் பத்தில் அந்தாதித் தொடையில் அமைந்த பத்து
(A) எட்டாம் பத்து (B) ஆறாம் பத்து
(C) நான்காம் பத்து (D) இரண்டாம் பத்து

**3.** கடியலூர் உருத்திரங் கண்ணனார் படைத்த நூலுக்குச் சோழ மன்னன் பரிசளித்தமையைக் குறிப்பிடுவது
(A) கலிங்கத்துப் பரணி (B) தக்கயாகப் பரணி
(C) முல்லைப் பாட்டு (D) மதுரைக் காஞ்சி

**4.** திருக்குறளைத் 'திருவள்ளுவப் பயன்' என்று குறிப்பிடுபவர்
(A) இளம்பூரணர் (B) பேராசிரியர்
(C) நச்சினார்க்கினியர் (D) கல்லாடர்

**5.** மடக்கணியை ஆண்ட முதல் காப்பியம்
(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை
(C) சிந்தாமணி (D) வளையாபதி

**6.** பத்தினி பத்தர்கள் என்று பத்தினி வழிபாட்டைக் கூறுவது
(A) தேவாரம் (B) திருவாசகம்
(C) திருமந்திரம் (D) பெரிய புராணம்

**7.** தமிழ் நாட்டில் முதல் மகளிர் பள்ளியை நிறுவியவர்
(A) ஆறுமுக நாவலர் (B) வேதநாயகம் பிள்ளை
(C) தாமோதரம் பிள்ளை (D) கால்டுவெல்

**8.** 'நாடக அரசி' எனப் பாராட்டப் பெற்றவர்
(A) பாலாமணி அம்மையார் (B) சுந்தராம்பாள்
(C) கோதை நாயகி (D) உய்ய வந்தாள் யசோதை

**9.** தமிழ் நாட்டுக்கு அச்சுப் பொறி வந்த நூற்றாண்டு
(A) *19* (B) *18*
(C) *17* (D) *16*

**10.** இரணத் தொடை என்பது

(A) கூழைத் தொடை (B) முரண் தொடை

(C) இரட்டைத் தொடை (D) செந்தொடை

**11.** தேன் என்னும் சொல்லுடன் குடம் என்னும் சொல் புணரும் போது கிடைப்பது

I தேக்குடம் II தேற்குடம்

III தேங்குடம் IV தேன்குடம்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) அனைத்தும் சரியல்ல

(C) I, II, III சரி (D) I, III, IV சரி

**12.** இன்னிலை என்பது

I முப்பால் உடையது

II வீட்டுப்பால் கொண்டது

III பொய்கையாரால் பாடப் பெற்றது

IV வெண்பாக்களால் ஆனது

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I, II, IV சரி

(C) II, III,IV சரி (D) I, III, IV சரி

**13.** பெருங்குறிஞ்சி எனக் குறிஞ்சிப் பாட்டைக் குறிப்பிட்டவர்கள்

I நச்சினார்க்கினியர் II தெய்வச் சிலையார்

III பரிமேலழகர் IV சேனாவரையர்

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I, II சரி

(C) II, III சரி (D) II, IV சரி

**14.** பண்பு உவமைக்கு எடுத்துக்காட்டு

I பவளம் போல் செந்துவர் வாய்

II மாரியன்ன வண்கை

III நீர் போல் குளிர்ந்த மேனி

IV நிலாப் போன்ற வட்ட முகம்

இவற்றுள்

(A) I, III, IV சரி (B) I, II, III சரி

(C) I, II, IV சரி (D) அனைத்தும் சரி

**15.** மதுரகவி ஆழ்வார்

I திருக்கோளூரில் பிறந்தவர்

II திருக்குருகூரில் நம்மாழ்வார் சிலையை நிறுவியவர்

III ஆயர் மரபில் அவதரித்தவர்

IV திருவாய் மொழியை ஓலைச் சுவடியில் எழுதியவர்

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I, II, IV சரி

(C) அனைத்தும் சரி (D) I, III, IV சரி

16. சுந்தரர்

I ஆளுடைய நம்பி எனப்பட்டவர்

II திருநாவலூரில் பிறந்தவர்

III முதலை உண்ட பிள்ளையை மீட்டவர்

IV முப்பதாவது வயதில் பூதஉடல் நீத்தவர்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) II, III, IV சரி

(C) I, II, III சரி (D) அனைத்தும் சரி

17. ராஜம் கிருஷ்ணன்

I சாகித்திய அகதமி விருது பெற்றவர்

II 'வேருக்கு நீர்' எனும் புதினம் படைத்தவர்

III 'சமுதாய வீதி' எனும் புதினம் படைத்தவர்

IV 'கரிப்பு மணிகள்' எனும் புதினம் படைத்தவர்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) I, III, IV சரி

(C) அனைத்தும் சரி (D) அனைத்தும் சரியல்ல

18. <u>உறுதிக்கூற்று</u>: (உ) குறிஞ்சிப் பாட்டைக் கபிலர் இயற்றினார்.
<u>காரணம்</u>: (கா) பாரி வேந்தனுக்குக் களவு ஒழுக்கத்தை உணர்த்துவதற்காகப் பாடினார்.

(A) (உ). சரியன்று ; (கா). சரி (B) (உ). (கா).இரண்டும் சரியல்ல

(C) (உ). கா. இரண்டும் சரி (D) (உ). சரி. (கா.) சரியன்று

19. <u>உறுதிக்கூற்று</u>: (உ) திருக்குறளுக்குப் பொய்யாமொழி என்றொரு பெயருண்டு
<u>காரணம்</u>: (கா) திருவள்ளுவரின் இயற்பெயர் பொய்யாமொழி

(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி

(C) (உ). சரி ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று ; (கா). சரி

20. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்
<u>காரணம்</u>: (கா) சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் புகாரைக் களமாகக் கொண்டவை

(A) (உ). சரி (கா). சரியன்று (B) (உ). (கா). இரண்டும் சரி

(C) (உ). (கா).இரண்டும் சரி அல்ல (D) (உ). சரியன்று (கா).சரி

21. <u>உறுதிக்கூற்று</u>: (உ) ஹமீது இப்ராகிம், வண்ணக் களஞ்சியப் புலவர் எனப் பட்டார்
<u>காரணம்</u>: (கா) வண்ண வண்ணக் கவிதைகள் வார்த்தவர்.

(A) (உ). சரியன்று (கா). சரி (B) (உ). சரி (கா). சரியன்று

(C) (உ). (கா). இரண்டும் சரியல்ல (D) (உ). (கா). இரண்டும் சரி

22. <u>உறுதிக்கூற்று</u>: (உ) தேசிக விநாயகம் பிள்ளைக்குக் கவிமணி என்ற பட்டம் வழங்கப் பெற்றது
<u>காரணம்</u>: (கா) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே-நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா' - என்று அவர் பாடினார்
(A) (உ). சரி ; (கா). சரியன்று (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). (கா). இரண்டும் சரியன்று (D) (உ).சரியன்று (கா). சரி

23. <u>உறுதிக்கூற்று</u>: (உ) பட்டினப் பாலையின் தலைவன் செலவழுங்குகிறான்
<u>காரணம்</u>: (கா) பாலை வழியைக் கடத்தற்கு அவனுக்கு அரிதாக இருக்கிறது
(A) (உ). (கா). இரண்டும் சரி (B) (உ).(கா).இரண்டும் சரியல்ல
(C) (உ).சரியன்று ; (கா). சரி (D) (உ). சரி (கா). சரியன்று

24. <u>உறுதிக்கூற்று</u>: (உ) அருணகிரிநாதர் திருப்புகழ் பாடித் தமிழை வளர்த்தார்
<u>காரணம்</u>: (கா) ஆயிரத்தெட்டு மேளகர்த்தா பண்களையும் அவர் அதில் பாடியுள்ளார்
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ).(கா).இரண்டும் சரி
(C) (உ). சரி. ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று ; (கா). சரி

25. <u>உறுதிக்கூற்று</u>: (உ) பதினோரம் திருமுறையில் திருமுகப் பாசுரம் ஒன்று உள்ளது
<u>காரணம்</u>: (கா) பாணபத்திரனுக்குப் பொருள் கொடுத்து உதவுமாறு சேரலனிடம் சிவபெருமான் விடுத்த கடிதமாக அது உள்ளது
(A) (உ). ; (கா). இரண்டும் சரி (B) (உ).(கா).இரண்டும் சரி அல்ல
(C) (உ). சரி (கா). சரியன்று (D) (உ). சரியன்று (கா). சரி

26. <u>உறுதிக்கூற்று</u>: (உ) ஏனாதி என்பது ஒரு மோதிரம்
<u>காரணம்</u>: (கா) வனாதிப் பட்டம் பெற்றவர் மட்டுமே அதை அணியலாம்
(A) (உ).;(கா). இரண்டும் சரியல்ல (B) (உ). சரி ; (கா). சரியன்று
(C) (உ). சரியன்று (கா). சரி (D) (உ). (கா). இரண்டும் சரி

27. <u>உறுதிக்கூற்று</u>: (உ) மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவை நோன்பை நோற்பர்
<u>காரணம்</u>: (கா) பெண்கள் தங்கள் கணவருக்கு நீண்ட ஆயுள் வேண்டி அப்போது நோற்பர்
(A) (உ). (கா).இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி (கா). சரியன்று (D) (உ). சரியன்று (கா). சரி

28. <u>நிரல்படுத்துக.</u>
குறிஞ்சிப்பாட்டு கூறும் பூக்களின் நிரல்:
(A) ஆம்பல், செங்காந்தள், குவளை, அனிச்சம்
(B) செங்காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை
(C) அனிச்சம், குவளை, செங்காந்தள், ஆம்பல்
(D) குவளை, அனிச்சம், ஆம்பல், செங்காந்தள்

29. <u>நிரல்படுத்துக.</u>
அம்போதரங்க வகை
(A) பேரெண், அளவெண், இடைஎண், சிற்றெண்
(B) சிற்றெண், இடை எண், அளவெண், பேரெண்
(C) இடைஎண், சிற்றெண், அளவெண், பேரெண்
(D) அளவெண், இடைஎண், சிற்றெண், பேரெண்

30. <u>நிரல்படுத்துக.</u>
மர உறுப்புக்கள்
(A) தளிர், இலை, தோடு, முறி
(B) இலை, தளிர், தோடு, முறி
(C) தோடு, முறி, தளிர், இலை
(D) இலை, தளிர், முறி, தோடு

31. <u>நிரல்படுத்துக.</u>
அரசர்க்குரியன
(A) குடை, கொடி, முரசு, படை
(B) முரசு, படை, கொடி, குடை
(C) படை, கொடி, குடை, முரசு
(D) கொடி, குடை, முரசு, படை

32. <u>நிரல்படுத்துக.</u>
ஆடூஉக் குணம்
(A) கடைப்பிடி, ஓர்ப்பு, நிறை, அறிவு
(B) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி
(C) நிறை, ஓர்ப்பு, அறிவு, கடைப்பிடி
(D) ஓர்ப்பு, அறிவு, நிறை, கடைப்பிடி

33. <u>நிரல்படுத்துக.</u>
அரண் வகை :
(A) காடு, மலை, மதில், கடல் (B) மதில், மலை, கடல், காடு
(C) கடல், மலை, காடு, மதில் (D) மலை, காடு, மதில், கடல்

34. <u>நிரல்படுத்துக.</u>
அகவற்பா
(A) நேரிசை, நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம், இணைக்குறள்
(B) அடிமறி மண்டிலம், நிலை மண்டிலம், நேரிசை, இணைக்குறள்
(C) இணைக்குறள், நேரிசை, அடிமண்டிலம், நிலைமண்டிலம்
(D) நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம், இணைக்குறள், நேரிசை

**35.** <u>நிரல்படுத்துக.</u>
அவத்தைகள்
(A) காட்சி, மெலிதல், வேட்கை, ஒருதலை உள்ளுதல்
(B) காட்சி, ஒருதலை உள்ளுதல், வேட்கை, மெலிதல்
(C) காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல்
(D) மெலிதல், வேட்கை, ஒருதலை உள்ளுதல், காட்சி

**36.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | கானல் | (1) | முல்லை |
| (b) | ஏனல் | (2) | நெய்தல் |
| (c) | புறவு | (3) | பாலை |
| (d) | கடம் | (4) | குறிஞ்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

**37.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | டம்பாச்சாரி | (1) | திண்டிவனம் இராமசாமி ராஜா |
| (b) | பிரதாப சந்திர விலாசம் | (2) | நவாப் கோவிந்தசாமி ராவ் |
| (c) | அரிச்சந்திர விலாசம் | (3) | காசி விசுவநாத முதலியார் |
| (d) | கர்ண வதம் | (4) | அப்பாவு பிள்ளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

**38.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | 'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' | (1) | திரிகடுகம் |
| (b) | 'நெஞ்சம் அடங்குதல் வீடாகும்' | (2) | சிறுபஞ்சமூலம் |
| (c) | 'நூற்கு இயைந்தசொல் வனப்பே வனப்பு' | (3) | முதுமொழிக் காஞ்சி |
| (d) | 'கற்றலின் கற்றாரை வழி படுதல் சிறந்தன்று' | (4) | பழமொழி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

39. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ரூபாவதி | (1) | ச.து.சு.யோகியார் |
| (b) | காமினி | (2) | பரிதிமாற் கலைஞர் |
| (c) | சுதந்திர தீபம் | (3) | ஐசக் அருமைராசன் |
| (d) | முல்லை மாடம் | (4) | த.பெருமாள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

40. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | முரள் | (1) | நாலறிவு |
| (b) | சிதல் | (2) | ஐயறிவு |
| (c) | தும்பி | (3) | ஈரறிவு |
| (d) | மா | (4) | மூவறிவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

41. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | நனவிற் கண்டதூஉம் ஆங்கே | (1) | காமம் வெளிப்படும் தோறும் இனிது |
| (b) | உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால் | (2) | களவும் தான் கண்ட போழுதே இனிது |
| (c) | களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் | (3) | பெருகலில் குன்றல் இனிது |
| (d) | பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை | (4) | கள்ளினும் காமம் இனிது |

| | | | | |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

42. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | மடன் | (1) | அழுகை |
| (b) | வறுமை | (2) | இளிவரல் |
| (c) | மென்மை | (3) | மருட்கை |
| (d) | சிறுமை | (4) | நகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

43. <u>பொருத்துக:</u>

| | |
|---|---|
| (a) தத்துவராயர் | (1) திருக்கச்சூர் நந்தி |
| (b) தாண்டவராயர் | (2) அசுவமேதயாகப் புராணம் |
| (c) மதுரகவிராயர் | (3) மோகவதைப் பரணி |
| (d) சரவணப் பெருமாள் கவிராயர் | (4) கைவல்ய நவநீதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

44. <u>பொருத்துக:</u>

| | |
|---|---|
| (a) அகராதி நிகண்டு | (1) ஈழத்துப் பூராடனார் |
| (b) ஆசிரிய நிகண்டு | (2) சிதம்பரேவணச் சித்தர் |
| (c) நீரத நிகண்டு | (3) வல்வை வயித்திய லிங்கம் |
| (d) சிந்தாமணி நிகண்டு | (4) ஆண்டிப் புலவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

45. <u>பொருத்துக:</u>

| | |
|---|---|
| (a) அப்துல் ரகுமான் | (1) தோணி வருகிறது |
| (b) ஈரோடு தமிழன்பன் | (2) அன்று வேறு கிழமை |
| (c) ஞானக் கூத்தன் | (3) ஊசிகள் |
| (d) மீரா | (4) பால்வீதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

**(46–50)**கீழ்வரும் பாடற் பகுதியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடை அளிக்கவும்.

செங்கதிர்ச் செல்வன் சினம்கரந்த போழ்தினால்
பைங்கொடி முல்லை மணம்கமழ வண்டிமிர
காரோடு அலமரும் கார்வானம் காண்தொறும்
நீரோடு அலமரும் கண்

தடமென் பணைத்தோளி! நீத்தாரோ வாரார்
மடநடை மஞ்ஞை அகவ - கடல்முகந்து
மின்னோடு வந்து எழில்வானம் வந்தென்னை
என்னாகுதி என்பாரும் இல்

தண்நறுங் கோடல் துடுப்பெடுப்ப கார்எதிரி
விண்உயர் வானத் துரும்உரற்ற - திண்ணிதின்
புல்லுநர் இல்லார் நடுங்க சிறுமாலை
கொல்லுநர் போல வரும்

கதழ்உறை வானம் சிதற இதழகத்துத்
தாதுஇணர்க் கொன்றை எரிவளர்ப்ப - பாஅய்
இடிப்பது போலும் எழில்வானம் நோக்கி
துடிப்பது போலும் உயிர்

ஆலி விருப்புற்று அகலி புறவெல்லாம்
பீலி பரப்பி மயிலை - சூலி
விரிகுவது போலுமிக் கார்அதிர ஆவி
உருகுவது போலும் எனக்கு

இனத்த அருங்காலை பொங்க புனத்த
கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப - இடிமயங்கி
யானும் அவரும் வருந்த சிறுமாலை
தானும் புயலும் வரும்

காரிகை வாடத் துறந்தாரும் வாராமுன்
கார்க்கொடி முல்லை எயிறீன - காரோடு
உடன்பட்டு வந்தலைக்கும் மாலைக்கோ எம்மின்
மடம்பட்டு வாழ்கிற்பார் இல்

கொன்றைக் குழலூதிக் கோவலர் பின்நிரைத்து
கன்றமர் ஆயம் புகுதா - இன்று
வழங்கிய வந்தன்று மாலையாம் காண
முழங்கிவில் கோலிற்று வான்.

46. கொல்லுநர் போல வருவது

(A) கூற்றம் (B) கார்

(C) இடி (D) மாலை

47. கார்கால வரவின் அறிகுறி

I மின்னல் வீசுவது

II இடிமுழங்குவது

III ஆயர் நிரையோடு ஆயம் புகுவது

IV வெண்ணிலா ஒளி வீசுவது

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I, II, IV சரி

(C) I, III, IV சரி (D) அனைத்தும் சரி

48. உறுதிக்கூற்று: (உ) கார்காலம் வந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன.

காரணம்: (கா) பிரிந்து சென்ற தலைவன் விரைந்து வருவதற்கான அறிகுறிகளாக அவை அமைந்தன

(A) (உ). சரி (கா). சரியல்ல (B) (உ). சரி (கா). சரி

(C) (உ). சரியல்ல (கா). சரி (D) இரண்டும் சரியல்ல

49. நிரல்படுத்துக.

(A) ஆலி அகவுதல், மயில் ஆலுதல், கார் அதிர்தல், ஆவி உருகுதல்

(B) மயில் ஆலுதல், கார் அதிர்தல், ஆலி அகவுதல், ஆவி உருகுதல்

(C) கார் அதிர்தல், மயில் ஆலுதல், ஆவி உருகுதல், ஆலி அகவுதல்

(D) ஆவி உருகுதல், மயில் ஆலுதல், ஆலி அகவுதல், கார் அதிர்தல்

50. பொருத்துக:

(a) மஞ்ஞை (1) இமிர்தல்

(b) வண்டு (2) அகவுதல்

(c) கோவலர் (3) தளிர்த்தல்

(d) முல்லை (4) குழல் ஊதல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |